தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையில் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

புதன்கிழமை, 1974 ஏப்ரல் 10

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Pension Papers of Teachers

* 291 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of teachers whose pension papers are pending disposal, for over a year, with the District Educational Officer, Thanjavur;

(b) the reasons therefor; and

(c) the action proposed to be taken by the Government in the matter?

ஆசிரியர்களின் ஓய்வூதியக் கோப்புகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டக் கல்வி அலுவலரிடம் எத்தனை ஆசிரியர் ஓய்வூதியக் கோப்புகள் முடிவுறு நிலையில் உள்ளன?

(இ) அதற்கான காரணங்கள் என்ன?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தஞ்சாவூர் மாவட்ட கல்வி அதிகாரி அலுவலகத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ள ஆசிரியர் ஓய்வூதியம் குறித்து ஒப்பளிப்பு செய்ய வேண்டிய கருத்துருக்களின் எண்ணிக்கை 34 ஆகும்.

(இ) இவற்றில் 17 கருத்துருக்கள் ஏற்கெனவே தஞ்சாவூர் மாவட்டக் கல்வி அதிகாரியால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாநில கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு ஆணைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும் 10 கருத்துருக்கள் 1—6—1970-க்கு பின் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு, விரிவு படுத்தப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின்படி அதிகச் சலுகைகள் கொடுத்திருப்பதால், அவர்களது சம்பளத்தை திரும்பவும் அறுதியிட்டு அதன்பின் ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்யவேண்டிய நிலையில் உள்ளது. மீதமுள்ள 7 கருத்துருக்களுக்கு கூடுதல் விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைத்தவுடன் ஒப்பளிப்பு முடிவு செய்யப்படும்.

(உ) ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரிகளுக்கு ஓய்வூதிய கருத்துருக்களை மிக விரைவாக முடிவு செய்யுமாறு ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஓய்வு பெற்ற ஆசிரியர்களது ஓய்வூதிய கோரிக்கைகள் தீர்க்கப்படும். மேலும் தஞ்சாவூர் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அவரது அலுவலகத்தில் நிலுவையாக உள்ள ஓய்வூதிய கருத்துருக்களை எல்லாம் மிக விரைவாக முடிவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு உடனடியாக 80 சதவீதம் ஓய்வூதியத்தை வழங்கும்படி மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களுக்கு இப்பொழுது ஒரு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையின் அடிப்படையில், 26—2—1970-க்குப் பிறகு ஓய்வு பெற்று ஓய்வூதியம் வழங்கப்படாமலிருக்கும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு அந்த அடிப்படையில் அந்த அதிகாரிகளே 80 சதவீதம் ஓய்வூதியமாவது உடனடியாக வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அந்த ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது. அதனுடைய முழு விவரங்களும் வந்தபிறகு, 80 சதவீதம் என்பது இப்பொழுது உள்ளவர்களுக்கும், ஏற்கெனவே இருந்தவர்களுக்கும் சேர்த்துத்தான் கணக்கிடப்படுகின்ற அளவுக்கு வரும்.

1974 ஏப்ரல் 10]

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, சில முதன்மைக் கல்வி அதிகாரிகள் 1—4—1974-க்குப் பிறகு ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு மட்டுமே இது பொருந்தும், முன்பு ஓய்வுபெற்றவர்களுக்கு இல்லை என்கிறார்கள். எனவே இதை அரசு தெளிவுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி ஆராயப்படும்.

Vacant posts of subject Teachers

* 292 Q.—THIRU K.S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a number of posts of subject teachers in Government 'B' Wing Schools have been kept vacant for a long time; and

(b) if so, the steps taken by the Government to fill up these vacancies?

காலியாக உள்ள பாட ஆசிரியர்களின் பதவிகள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் 'பி' பிரிவு (கழக) உயர்நிலைப்பள்ளிகளில் பாட ஆசிரியர்கள் பதவிகள் பல, நெடுநாட்களாகக் காலியாக உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அந்தக் காலி இடங்களை நிரப்புவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, பல பள்ளிகளில் விஞ்ஞானப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஹிஸ்டரி, ஜாக்ரஃபி ஆசிரியர்களைக் கொண்டே பாடம் நடத்துகிறார்கள். சில பள்ளிக்கூடங்களில் பௌதிக பாடம் விருப்பப்பாடமாக இருக்கிறது. பௌதிக பாடம் படித்த ஆசிரியர்களே அந்தப் பள்ளிக்கூடங்களில் இல்லை. முசிறியிலே உள்ள ஆசிரியர் பயிற்சிப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS